DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.122-2016 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 1 |
| Name | பராசக்தி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 21-04-2021

நான் தற்போது ஸ்ரீவைகுண்டத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர். சுமார் 02-06-2011ம் தேதி மாலை 03.45 மணியளவில் எனது தெருவில் நான் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரி அவரது டிவிஎஸ் 50 மோட்டார் சைக்கிளில் வந்து எனது சைக்கிளில் மோதினார். ஏன் மோதினீர்கள் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி அசிங்கமான வார்த்தைகளால் ஏசி எனது நெஞ்சில் மிதித்து கீழே தள்ளினார். அவர் என்னை கெட்டவார்த்தைகளால் பேசியதில் எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டது. பின்னர் உடை வெட்டும் அரிவாளால் என்னை வெட்டி கொல்லாமல் என்று மிரட்டி வெட்டவந்தார். நான் கீழே விழுந்துவிட்டேன். எனக்கு காயம் ஏற்பட்டது. இந்த சம்பவத்தை எனது பக்கத்து வீட்டில் வசிக்கும் கோமதி என்பவர் பார்த்து விலக்கி விட்டார். காயம்பட்ட நான் ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்து சேர்ந்தேன். அப்போது அங்கு வந்த போலீசாரிடம் நடவடிக்கை எடுக்க கோரி ஒரு வாக்குமூலம் கொடுத்தேன். நான் அளித்த வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதுதான். அதிலுள்ள பராசக்தி என்ற கையெழுத்து என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும்.** ஏற்கனவே ஆஜர் எதிரிக்கும் எனக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சினை இருந்துவந்தது. அதனாலே சம்பவம் நடைபெற்றது. இது சம்பவமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.122-2016 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 2 |
| Name | கோமதி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 21-04-2021

நான் தற்போது ஸ்ரீவைகுண்டத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 யை எனக்கு தெரியும். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 03.30 மணிக்கு எங்களது தெருவின் அருகில் இருக்கும் பராசக்தி சைக்கிளில் வந்த போது ஆஜர் எதிரி அவரது டிவிஎஸ் 50 மோட்டார் சைக்கிளில் வந்து பராசக்தி சைக்கிளில் மோதினார். பராசக்தி ஏன் மோதினீர்கள் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி பராசக்தியை கீழே தள்ளி அசிங்கமான வார்த்தைகளால் பேசி கீழே தள்ளினார். ஆஜர் தன் கையில் வைத்திருந்த விறகு வெட்டும் அரிவாளால் வெட்டி கொன்றுவிடுவதாக பராசக்தியை மிரட்டினார். நான் சண்டையை விலக்கி விட்டேன். இது சம்பவமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.